DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 64/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | :பூரணம் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 30.10.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 30th **October 2025.**

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

<u>முதல்விசாரணை தொடர்ச்சி</u>

என் மகன் முத்துராஜ் என்னுடன் வந்து என் வீட்டிற்கு அழைத்தார். அப்போது என் கணவர் வந்தார். என்னை சுப்பிரமணியன் மிதித்தார். என்னை சுப்பிரமணியன் மேல்தாடையில் மிதித்தார். அதனால் எனக்கு மேல்தாடையில் பற்கள் உடைந்துபோயின. எதிரிகள் என் கணவரை கெட்ட வார்த்தையால் பேசினார்கள். என் மகனையும் எதிரிகள் அடித்தார்கள். எதிரி கோமதியம்மாள் என் மகள் மாரியம்மாளை மிதித்து கீழே தள்ளினார். உன்னால் என்ன செய்யமுடியுமா செய்துபார் என்று எதிரிகள் கூறினார்கள். என் மகனும், என் கணவரும் என்னை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டுவந்து சேர்த்தார்கள். அரசு மருத்துவமனையில் 4 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். மருத்துவமனைக்கு நான் சேர்ந்த

அன்று மாலை 5 மணிக்கு அங்கு வந்த போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். மேற்படி புகார்வாக்குமூலத்தில் உள்ள இடதுகை பெருவிரல் ரேகை என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 64/2024** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | : சண்முகையா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 30.10.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 30th October 2025.

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது கே.ரெட்டியபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன் அ.சா.1 எனது மனைவி. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகளின்வீடு என் வீட்டிற்கு பக்கத்தல் உள்ளது. எதிரிகள் அவர்களுடைய நாயை நாங்கள் மருந்து வைத்து கொன்றுவிட்டோம் என்று எங்களிடம் பிரச்சனை செய்தார்கள். சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு காலை 7–8 மணிக்கு என் வீட்டிற்கு முன்பு எதிரிகள் மூவரும் என் மனைவியை அடித்து அவரது பல்லை உடைத்தார்கள். அவரது தாடையை பிராண்டிவிட்டார்கள் எதிரிகள் என் மனைவியை தாறுமாறாக அசிங்கமாக பேசினார்கள். சத்தம் கேட்டு வீட்டிலிருந்து ஓடி வந்த என் மகனை அடித்து சுப்பிரமணியன் சட்டையை கிழித்தார். என் மகனின் தோள்பட்டையை சுப்பிரமணியன்

பிராண்டிவைத்தார். பின்பு சின்னகோவிலான்குளம் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**